# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

<u>ஆணை நாள் 03.06.2026</u>

<u>முன்னிலை</u>

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 7315/விசாரணை/B/2023</u>**

திரு.A.மாரிமுத்து .. மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர்(நில எடுப்பு),
புறநகர் திட்டம்,சேலம்-636 008. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 06.01.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டபோது, மனுதாரர் ஆஜராகியும், பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகாத நிலையில், மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்டும், ஆவணங்களின் அடிப்படையிலும் இவ்வாணையத்தால் மேல்முறையீட்டாளருக்கு அவர் கோரிய தகவல்களை வழங்கிடவும், ஆணையத்தின் விசாரணைக்கு ஆஜராகாததற்கு விளக்கம் அளித்திடவும், மனுதாரர் ஆணையத்திற்கு வந்துசென்ற செலவிற்காக ரூ.5,000/- பொது அதிகார அமைப்பு வழங்கி, அது குறித்த அறிக்கையை சமர்ப்பித்திடவும் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிட்டிருந்தது.

2. மேற்குறித்த உத்தரவின்படி, பொதுத் தகவல் அலுவலர் 16.03.2026 அன்று நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 11.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக அவர் கோரிய தகவல்கள் பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அதன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார். மேலும் அவர், தனி வட்டாசியர்/பொதுத் தகவல் அலுவலர் (புறநகர் திட்டம்), சேலம் பதவி 30.06.2024 முதல் 03.03.2026 வரை காலியாக இருந்தமையால், தன்னை மாவட்டாட்சியர் 03.03.2026 அன்று அப்பதவியில் பணியமர்த்தி, தான் 04.03.2026 அன்று பணியில் இணைந்ததாகவும், மேற்படி பதவி காலியாக இருந்தமையால் மட்டுமே 06.01.2026 அன்று நடந்த விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் ஆஜராகவில்லை என்றும், அபராத தொகை ரூ.5,000/- வழங்குவதிலிருந்து விலக்கு அளிக்குமாறு தெரிவித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

3. சேலம் தனி வட்டாட்சியர்(நில எடுப்பு)/தனி வட்டாட்சியர் பணியிடம் மட்டுமே 30.06.2024 முதல் 03.03.2026 வரை காலியாக இருந்திருக்கும்பட்சத்தில், அவ்வலுவலகத்தில் பணியாற்றிய அலுவலர்கள் எவரையேனும் அல்லது வேறு வட்டாட்சியரையோ பொதுத் தகவல் அலுவலராக பணியமர்த்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உத்தரவிட்டிருக்க

வேண்டும். ஏறத்தாழ ½ ஆண்டிற்கு தனி வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் பணியிடம் நிரப்பப்படாமல் அல்லது பொறுப்பு வழங்காமல் இருந்ததை இவ்வாணையத்தால் ஏற்க இயலவில்லை. மேலும், தனி வட்டாட்சியர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியருக்கு அடுத்த நிலையில் உள்ள அலுவலர், இவ்வாணையத்தின் அழைப்பாணையை பெற்றுக் கொண்டு, மேற்படி பணியிடம் காலியாக உள்ள விபரத்தையாவது இவ்வாணையத்திற்கு முன்பாகவே தெரிவித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால், இவ்வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு, மனுதாரர் இவ்வாணையத்திற்கு வந்து சென்று இருக்க அவசியம் நேரிட்டிருக்காது.

4. ஆகவே, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள், இவ்வாணையத்தின் 06.01.2026 தேதியிட்ட உத்தரவுப்படி மனுதாரருக்கு நஷ்டஈடாக ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வழங்கி, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை ஆணையத்திற்கு 30.06.2026-க்குள் தவறாமல் அனுப்பி வைத்திடுமாறும், தவறும்பட்சத்தில் இவ்வாணையத்தால் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிட்டு, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7135/B/2023</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தனி வட்டாட்சியர்(நில எடுப்பு),
புறநகர் திட்டம், அய்யந்திருமாளிகை ரோடு,
சேலம்-636 008.

திரு.A.மாரிமுத்து
76/90 மேட்டுத் தெரு,பவானி மெயின் ரோடு,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம்-637 101.

Copy to: Stock file
SJ/PS- 12.06.26